بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 22.8.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 22, August 2014 (Tamil)**

**நாம் விருந்தினர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். உண்மையான முறையில் நாம் எத்தகைய தொண்டு செய்ய வேண்டுமென்றால் அது நமக்கு உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும். எனவே நமது அன்பிற்குரிய விருந்தினர்களினால், நெருங்கிய உறவினர்களைப் பார்க்கும்போது ஏற்படும் அதே மகிழ்ச்சி நமக்கு ஏற்பட வேண்டும். அப்படிப்பட்ட மகிழ்ச்சி இருந்தால்தான் தொண்டிற்கான உரிமையும் நிறைவேறும்.**

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் அருளினால் அடுத்த வெள்ளிக் கிழமையிலிருந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பிரித்தானியாவின் ஆண்டு மாநாடு துவங்குகிறது – இன்ஷா அல்லாஹ். மாநாடு நடக்கும் இடத்தில் இதுவரை கணிசமான அளவுக்கு ஆயத்தங்களின் பணிகள் முழுமையடைந்து விட்டன. விருந்தினர்களின் வருகையும் ஆரம்பமாகி விட்டது. மாநாட்டின் அருள்களைப் பெறுவதற்காக பயணம் மேற்கொண்டுள்ளவர்களையும், பயணத்தில் இருப்பவர்களையும் அல்லது வந்து சேர்ந்தவர்களையும் அல்லது இனி வர விருப்பவர்களையும் ஆகிய அனைவரையும் அல்லாஹ் பாதுகாப்பானாக. அஹ்மதிகளை மட்டுமல்லாது உலகத்தின் ஒவ்வொரு நபரையும் பாதுகாப்பானாக. எந்த சாந்தியையும், சமாதானத்தையும் பெறுவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இக்காலத்தில் அனுப்பி வைத்துள்ளானோ அதனை அவர்கள் பெறட்டுமாக.

நாம் அறிந்திருப்பது போன்று, நமது மாநாட்டின் ஏற்பாடுகள் தன்னார்வத்துடன் தொண்டு செய்ய வேண்டும் என்ற உணர்வின் மூலமாக முழுமையடைகின்றன. அதன் அடிப்படையில் மாநாட்டிற்கு ஒரு ஜுமுஆவிற்கு முன்னர் நான், பணியாளர்களுக்கு அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டுகின்றேன். இப்போது நான் அந்த அடிப்படையிலேயே சில விஷயங்களை பணியாளர்களுக்கு எடுத்துக் கூறுவேன். இப்போது நான் மாநாட்டின் விருந்தினர்களை சான்றாகக் கொண்டு கவனமூட்ட விரும்புகிறேன். எனவே இந்த விஷயங்கள் ஆண்டு மாநாட்டைச் சுற்றியே வந்து கொண்டிருக்கும். **ஆண்டு மாநாட்டிற்காக வரும் விருந்தினர்கள் கலப்பற்ற முறையில் மார்க்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வருகின்றனர். ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களின் குறிக்கோள் இதுவாகவே இருக்க வேண்டும். இந்தக் குறிக்கோள் இருக்கும்போது பிறகு விருந்தினரின் முக்கியத்துவம் பல மடங்கு அதிகமாகி விடுகிறது.** அதிலும் குறிப்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு குறிப்பாக கவனமூடியிருக்கிறார்கள் என்றும் இந்த மாநாட்டை கலப்பற்ற முறையில் மார்க்கக் குறிக்கோளுக்குப் பாத்திரமானதாகக் குறிப்பிட்டுள்ளார்கள் என்றும் நாம் பார்க்கும்போது அதன் முக்கியத்துவம் எந்த அளவுக்கு அதிகமாகி விடுகிறது! வருபவர்கள் எந்தவொரு சொந்த பயனுக்காகவும் வருவதில்லை. எந்தவொரு உலக கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருவதில்லை. இந்த குறிக்கோளில் ஒருவர் வருகின்றார் என்றால் அவர் தனது நற்கூலியை வீணாக்குகின்றார். எனவே இங்கு வருகின்ற எந்த விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக – பல்வேறு துறைகளில் பணிபுரிவதற்கு தூய மனம் கொண்டவர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளார்களோ அந்த விருந்தினர்கள் பொதுவான விருந்தினர்கள் அல்ல. மாறாக, காலத்தின் இமாமினால் நிலைநாட்டப்பட்ட அமைப்புக்கு செவிசாய்த்தவாறு அல்லாஹ்வுக்காக ஒன்று கூடும் விருந்தினர்கள் ஆவர்.

அவர்கள் சில நேரங்களில் தமது சக்திக்கும் அப்பாற்பட்டு அதிகமாக செலவு செய்து இங்கு வருகின்றனர். மேலும் இந்தப் பயணம் எல்லா வகையிலும் அருள்களுக்கு காரணமாக அமையட்டும்

என்பதற்காக மிக தொலைதூரத்திலிருந்து வருகின்றனர். கிலாஃபத்தின் மீது அவர்களுக்கு இருக்கும் அன்பு, இந்தப் பயணம் காலத்தின் கலீஃபாவை சந்திப்பதற்கும் காரணமாக அமைந்து விடும் என்ற உணர்வையும் அவர்களுக்கு ஊட்டிக் கொண்டிருக்கிறது. உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் வருகின்றனர்; புதிதாக பைஅத் செய்தவர்களும் வருகின்றனர்; பழைய அஹ்மதிகளும் வருகின்றனர். **வருகின்ற இவர்களின் கண்களில் கிலாஃபத்தின் மீதான அன்பை நான் காணும்போது, எவ்வாறு அல்லாஹ் நம்பிக்கை கொண்ட அவர்களின் உள்ளத்தில் கிலாஃபத்துடன் அன்பை ஏற்படுத்துகிறான் என நினைத்து அல்லாஹ்வுக்கு நன்றி கூறும் உணர்வுகள் அதிகமாகின்றன. இது எந்தவொரு மனிதனின் முயற்சியால் நடைபெற முடியாது.** அல்லாஹ் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி அன்னாருக்குப் பிறகு கிலாஃபத்தின் இந்த அமைப்பை உருவாக்கியதன் காரணமாகவே இது நடக்கிறது. இஸ்லாத்தின் சரியான போதனையைப் பற்றி உலகிற்கு தெளிவுபடுத்துவதற்காக அவ்வாறு செய்தான். இஸ்லாத்தின் அன்பான, நேரத்திற்குரிய தூதை உலகிற்கு எடுத்துக் கூறுவதற்காக அவ்வாறு செய்தான். உண்மையான இஸ்லாத்தில்தான் இனி உலகத்தின் அமைதி இருக்கிறது என்பதை உலகிற்கு எடுத்துக் கூறுவதற்காக அவ்வாறு செய்தான்.

ஆக, இந்த விஷயங்களைக் கேட்பதற்காகவும், பார்ப்பதற்காகவும், கற்பதற்காகவும் மக்கள் இங்கு வருகின்றனர். கிலாஃபத்துடன் அன்பு இருப்பதே இதற்குக் காரணமாகும். பிரித்தானியாவின் மாநாட்டில் மக்கள் குறிப்பாக மாநாட்டின் ஆன்மீக சூழ்நிலையிலிருந்தும் பயன் பெறுவோம்; அறிவு, தர்பிய்யத், மார்க்க நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வோம்; ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கும் வாரிசாவோம்; காலத்தின் கலீஃபாவுடன் சந்திப்பும் கிடைக்கும் என்பதற்காக வருகின்றனர். சுருக்கமாக, இங்கு வருபவர்களின் உணர்வு எத்தகையது என்றால், அது உலகின் வேறு எந்த உறவுகளிலும் இல்லை. இதன் பக்கமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பைஅத்தின் நிபந்தனைகளில் கவனமூட்டியிருக்கின்றார்கள். எனவே இங்கு வரும் விருந்தினர்களின் அந்தஸ்து ஒரு தனிச்சிறப்பான அந்தஸ்தாகும். அவர்களுக்கு முக்கியத்துவம் இருக்கிறது. இதன் காரணமாகவே அந்த விருந்தினர்களுக்கு தொண்டு செய்பவர்களின் முக்கியத்துவம் அதிகமாகின்றது. இந்த முக்கியத்துவத்தைப் புரிந்ததன் காரணமாகவே ஜமாஅத் சகோதரர்கள் தன்னார்வத்துடன் தொண்டு செய்வதற்காக தன்னை அர்ப்பணிக்கின்றனர். உலக அளவில் உயர்ந்த அதிகாரியாக இருப்பவருக்கும், நன்கு சம்பாதிக்கக் கூடியவர்களுக்கும் (மாநாட்டின்போது) உணவு சமைத்தல், ரொட்டிகளை சுடுதல் ஆகிய பல்வேறு பணிகளில் அமர்த்தப்படுகின்றனர். எதுவரை என்றால், கழிவறையை சுத்தம் செய்வதற்காக நிறுத்தினாலும் அவர்கள் மகிழ்ச்சியுடன் அந்த பணிகளைச் செய்கின்றனர். ஏனெனில் இந்த விருந்தினர்களுக்கு பணிவிடை செய்வதன் காரணமாக அவர்கள் எல்லையற்ற துஆக்களுக்கு வாரிசாகின்றனர். பிறகு இதே பணியாளர்கள் ஜமாஅத் அல்லாத மற்றவர்களுக்கு தப்லீகிற்குக் காரணமாக அமைகின்றனர். **ஒரு சிறுவன் மாநாடு நக்கும் இடத்தில் சுற்றித் திரிந்தவாறு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கின்றான் என்றால், அவனும் ஒரு மவுனமான தப்லீகை செய்து கொண்டிருக்கின்றான். நாங்கள் உலகில் குழப்பத்தை உருவாக்க வரவில்லை; மாறாக, உலகத்திற்கு பௌதீக தண்ணீர் வழங்குவதுடன் ஆன்மீகத் தண்ணீரையும் வழங்குபவர்களாவோம் என்பதை தெரிவிக்கின்றான்.** எனவே விருந்தினரின் முக்கியத்துவம் விருந்தளிப்பவரின் முக்கியத்துவத்தையும் அதிகமாக்கி விடுகின்றது! இந்த விஷயத்தை உலகில் வேறு எங்கும் காண முடியாது. எனவே விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக தன்னை அர்ப்பணித்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பணியாளர்களும், தன்னார்வத் தொண்டர்களும் நற்பேறு பெற்றவர்களாவர்.

திருக்குர்ஆனிலும் அல்லாஹ் விருந்தோம்பலுக்கான முக்கியத்துவத்தை மிக அதிகமாகக் குறிப்பிட்டிருக்கிறான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் அந்தஸ்து மற்றும் மேன்மைககளைப் பற்றிக் குறிப்பிடும்போது அவருடைய விருந்தோம்பல் பண்பை சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறான். எனவே எவர்கள் தன்னலமற்றவர்களாக விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்கின்றார்களோ அவர்களுக்கு அல்லாஹ்விடம் ஓர் அந்தஸ்து இருக்கிறது. ஏனெனில் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதால் அல்லாஹ் திருப்தி கொள்வான் என்பதை அவர்கள் புரிந்துள்ளனர். அல்லாஹ்வின் திருப்தியே அவர்களின் குறிக்கோளாகவும் இருக்கிறது. வேறு எந்த ஆசையும், எந்த நோக்கமும், நன்றியைப் பெறுவதும் அவர்களின் நோக்கமாக இருப்பதில்லை.

எனவே அல்லாஹ்வுக்காக பயணம் மேற்கொள்கின்ற, உலகியல் நோக்கம் இல்லாத எந்தவொரு

அப்படிப்பட்ட விருந்தினர்களின் உதாரணத்தையும் நாம் காண முடியாது. அவ்வாறே அல்லாஹ்வுக்காக மட்டும் விருந்தோம்பல் செய்யும் உதாரணத்தையும் நாம் காண முடியாது. இந்த அழகிய காட்சியை நாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மட்டும்தான் காண முடியும். அதற்கான காரணம், நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம்; கிலாஃபத்தின் சரடில் கோர்க்கப்பட்டுள்ளோம்; உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போம் என்ற உடன்படிக்கையை நிறைவேற்ற நாம் முயற்சி செய்கின்றோம்.

ஒவ்வோர் ஆண்டின் அநுபவம் என்னவென்றால், ஒவ்வொரு சிறுவரும் பெரியவரும், ஆணும் பெண்ணும், இளைஞரும், முதியவரும் ஒரு சிறப்பான உணர்வுடன் தொண்டு செய்கிறார். இந்த தொண்டு இவ்வாண்டும் இந்த உணர்வுடன் நடக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை- இன்ஷா அல்லாஹ். நடந்து கொண்டும் இருக்கிறது. வகாரே அமல் தொடர்பாக எனக்குக் கிடைத்த அறிக்கையின்படி, இவ்வாண்டு அல்லாஹ்வின் அருளினால் முன்னர் எவ்வித அநுபவமும் இல்லாத பல இளைஞர்கள் வகாரே அமலில் தற்காலிகமாக அர்ப்பணித்து கலந்து கொள்கின்றனர். எனவே அவர்களுக்கு சரியான வழிகாட்டலை வழங்குவது நமது கடமையாகும். சரியான வழிகாட்டல் கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அல்லாஹ்வும் அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருக்குமாறு கட்டளையிட்டுள்ளான். நிச்சயமாக சரியான வழிகாட்டுதலினாலும், அறிவுரையினாலும் இயல்புகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அமைப்பு, ஏற்பாடு பற்றிய ஞானம் இல்லாத, புதிதாக இணைந்தவர்கள் பெரும்பான்மையாக இருக்கின்றனர். அவர்களுக்கு தொண்டின் உணர்வு பற்றிய உண்மைநிலையை எடுத்துக் கூறுவது அவர்களுக்கு அவசியமானதாகும். புதிதாக கலந்து கொள்பவர்களில் பெரும்பாலார் மற்றவர்களின் முன்மாதிரியைப் பார்த்து தொண்டு செய்வதற்காக தன்னை முன்னிறுத்துகின்றனர். ஆயினும் அவர்களுக்கு கவனமூட்ட வேண்டிய தேவை இருக்கிறது. அவ்வாறே சிறுவர்கள் கலந்து கொள்கின்றனர். அவர்களுக்கும் டியூட்டி கொடுப்பது பற்றி, விருந்தினர்களுக்கு எவ்வாறு தொண்டு செய்ய வேண்டும் என்பது பற்றி கவனமூட்ட வேண்டிய தேவை இருக்கிறது. தொண்டின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதற்கு அறிவுரை தேவைப்படுகிறது. எனவேதான், ***வஸக்கிர் ஃபஇன்னஸ் ஸிக்ரா தன்ஃபவுல் முஃமினீன்*** அதாவது நினைவூட்டிக் கொண்டே இருப்பீராக; ஏனெனில் நினைவூட்டுவது நம்பிக்கை கொண்டவர்களுக்கு நன்மை தருகின்றது எனத் திருக்குர் ஆன் கூறுகிறது. (51:56) அல்லாஹ்வின் இந்தக் கட்டளை ஞானத்தைக் கொண்டுள்ளது.

எனவே டியூட்டி கொடுக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும், இவர்கள் நமது விருந்தினர்கள்; நாம் இவர்களுக்கு விருந்தோம்பல் செய்ய வேண்டும்; இவர்களுடன் எல்லா வகையிலும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு இருக்க வேண்டும். சில நேரத்தில் சில விருந்தினர்கள் (கோபம் ஏற்படும் வகையில்) தவறாகவும் நடந்து கொள்கின்றனர். ஆயினும் (விருந்தோம்பல் செய்பவர்கள்) தைரியத்துடன் செயல்பட வேண்டும். ஒவ்வொரு துறையைச் சேர்ந்த பணியாளரும், டியூட்டி கொடுக்கும் ஒவ்வொருவரும் பொறுமையைக் கடைபிடித்தவாறு தமது கடமைகளை செய்ய வேண்டும். விருந்தினர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அல்லாஹ் திருக்குர்ஆனில் (இப்ராஹீம் என்ற) ஒரு நபியின் உதாரணத்தை எடுத்து வைத்து கவனமூட்டியிருக்கின்றான். விருந்தினரின் சலாத்திற்கு பதில் கூறும்போது அதை விட அதிகமாக முழுமையான முறையில் அவருடைய சலாத்திற்கு பதில் கூற வேண்டும். அவருக்காக நல்ல உணர்வை வெளிப்படுத்த வேண்டும். அவருக்கு சாந்தியையும் பாதுகாப்பையும் வழங்க வேண்டும். மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும். மகிழ்ச்சி ஏற்படும்போதுதான் உண்மையான சாந்தி கிடைக்கிறது!

நாம் விருந்தினர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். உண்மையான முறையில் நாம் எத்தகைய தொண்டு செய்ய வேண்டுமென்றால், அது நமக்கு உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும். எனவே நமது அன்பிற்குரிய விருந்தினர்களினால், நெருங்கிய உறவினர்களைப் பார்க்கும்போது ஏற்படும் அதே மகிழ்ச்சி நமக்கு ஏற்பட வேண்டும். அப்படிப்பட்ட மகிழ்ச்சி இருந்தால்தான் தொண்டிற்கான உரிமையும் நிறைவேறும். பிறகு விருந்தோம்பலின் உயர்தரத்தை நாம் நிலைநாட்ட வேண்டும். நமது எல்லா வசதிகளுக்கும் ஏற்ப, நமது நிலைமைகளுக்கும் ஏற்ப விருந்தினருக்கான மிகச் சிறந்த ஏற்பாடு என்ன செய்ய முடியுமோ அதை செய்ய வேண்டும். ஏற்பாட்டாளர்களும் எப்போதும் இது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை மற்றவர்களை விட அதிகமாக புரிபவர்களாகவும் அதன்படி செயல்படுபவர்களாகவும் இருந்தார்கள்.**

அவர்கள் நமக்கு இது தொடர்பாக என்ன வழிகாட்டி இருக்கிறார்கள்? **அன்னார் கூறினார்கள்: விருந்தினருக்கு உங்கள் மீது உரிமை இருக்கிறது. அதை நிறைவேற்றுங்கள்.** விருந்தினர்கள் அதிகமாக வந்தனர்; அப்போது அந்த விருந்தினர்களை நபித்தோழர்களுக்கு மத்தியில் பிரித்துக் கொடுத்த உதாரணங்களும் இருக்கின்றன. தாமும் சில விருந்தினர்களை பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அவர்களை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். வீட்டிற்கு சென்ற பிறகுதான் வீட்டில் கொஞ்ச உணவும், பானமும் இருப்பது தெரிய வந்தது. அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டபோது, நோன்பு திறப்பதற்காக உங்களுக்காக வைக்கப்பட்ட கொஞ்ச உணவுதான் இருக்கிறது; வேறு ஏதுமில்லை என ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். அவர்கள் அதிலிருந்து கொஞ்சம் சுவைத்தார்கள். பிறகு விருந்தினரிடம் இப்போது நீங்கள் சாப்பிடுங்கள் என்றார்கள். ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பின்படி அன்னாருக்காக வைக்கப்பட்டிருந்த அந்த உணவினால் விருந்தனர் வயிறு நிறைய சாப்பிட்டனர் என்றும் அறிவிப்பிலிருந்து தெரிய வருகிறது.

ஹஸரத் நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கும் அந்த அளவுக்கு தர்பிய்யத் வழங்கினார்கள். நபித்தோழர்களும் விருந்தினர்களுக்கு தன்னலமற்ற முறையில் தொண்டு செய்யும் உணர்வைக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செயல்படும் ஆர்வம் நபித்தோழர்களிடம் இருந்தது. அதன் காரணமாக நபித்தோழர்களிடமும் விருந்தோம்பல் செய்யும் வியக்கத்தக்க உதாரணங்கள் காணப்படுகின்றன. எந்த அளவுக்கு விருந்தோம்பல் செய்தனர் என்றால், அது அல்லாஹ்வுக்கும் மகிழ்ச்சியூட்டியது. அந்த மகிழ்ச்சியை அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் தெரியப்படுத்தி விட்டான்.

அந்த சம்பவம் இதுவாகும். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு பயணி வந்தார். விருந்தினருக்காக உணவை அனுப்பி வையுங்கள் என அன்னார் வீட்டிற்கு செய்தி அனுப்பினார்கள். தண்ணீரைத் தவிர இன்று வீட்டில் எதுவுமில்லை என பதில் வந்தது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இன்று இந்த விருந்தினருக்கு விருந்தோம்பல் செய்யும் ஏற்பாட்டை யார் செய்வார்? என தோழர்களிடம் கேட்டார்கள். ஹுஸூர்! நான் ஏற்பாடு செய்கிறேன் என அன்ஸாரைச் சேர்ந்த ஒருவர் கூறினார். அவர் தன் மனைவியிடம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் விருந்தினருக்காக உணவிற்கான ஏற்பாடு செய் எனக் கூறினார். இன்று வீட்டில் குழந்தைகளுக்கு மட்டுமே உணவு இருக்கிறது. நமக்கு எந்த உணவும் இல்லை என்றார். அப்போது சஹாபி, சரி, நீ உணவை ஆயத்தம் செய்; சாப்பிடுவதற்கான நேரம் வரும்போது குழந்தைகளை தாலாட்டி தூங்க வைத்து விடு என்றார். அதன்படி மனைவி, உணவு ஆயத்தம் செய்தார். குழந்தைகளை தூங்க வைத்தார். விளக்கை ஏற்றினார். பிறகு விளக்கை சரி செய்யும் சாக்கில் எழுந்து சென்று விளக்கை அணைத்து விட்டார். பிறகு தாமும் சாப்பிடுகிறோம் என்பதை வெளிப்படுத்துவது போன்று இருவரும் விருந்தினருடன் அமர்ந்தனர். ஆக, அன்று இரவு அவர்கள் இருவரும் பசியுடனேயே இருந்தனர். மறு நாள் காலை அந்த தோழர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சந்தித்தபோது அவர்கள் புன்சிரித்தவாறு, இரவு நீர் நடந்து கொண்டதைக் கண்டு அல்லாஹ்வும் புன்சிரித்தான் எனக் கூறினார்கள். அல்லது உங்கள் இருவரின் அந்த செயலை அல்லாஹ் விரும்பினான் என்று கூறினார்கள். நபிமொழி அறிவிப்பில் வருகிறது. இந்த சம்பவத்தின்போதுதான் ***வயுஃஃஸிரூன அலா அன்ஃஃபுஸிஹிம் வலவ்கான பிஹிம் கஸாஸா. வமன் யூக்க ஷுஹ்ஹ நஃஃப்ஸிஹீ ஃஃபஉலாயிக ஹுமுல் முஃஃப்லிஹூன்*** என்ற வசனம் இறங்கியது. அதாவது இந்தத் தூயவர்கள், தியாகம் செய்பவர்கள், கலப்பற்ற தன்மை கொண்ட நம்பிக்கையாளர்கள் தாமே தேவையுடையவர்களாகவும், பசியுள்ளவர்களாகவும் இருக்கின்ற நிலையில் தம்மை விட மற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றனர். மேலும் எவர்கள் மனதின் கருமித்தனத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்களோ அவர்களே வெற்றி பெறுபவர்கள். (59:10)

எனவே இன்றும் நாம் இந்த விஷயத்தை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நாட்களில் வருகின்ற விருந்தினர்கள் ஹஸ் ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அன்பர் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம்) அவர்களின் விருந்தினர்கள் ஆவர். மார்க்கத்தின் நோக்கத்திற்காக பயணம் செய்து வருகின்ற விருந்தினர்கள் ஆவர். இன்றும் ஒரே நோக்கம்தான் என்றாலும் நிலைமைகள் மாறுபட்டவையாகும். இங்கு எல்லாவற்றையும் கொடுத்து விட்டு, பிறகு பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் வேலை செய்பவர்களிடம் நீங்கள் உங்களை அர்ப்பணியுங்கள் போதும்; மற்ற வசதிகளை ஜமாஅத் செய்து விடும் எனக் கூறப்படுகிறது. இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், தனது எஜமானரைப் பின்பற்றியவாறு விருந்தோம்பலில் செய்த தியாகங்கள் நமக்குத் தெரிகின்றன. அவர்கள்

விருந்தினர்களின் வசதிக்காக தனது வசதியை தியாகம் செய்து விட்டார்கள். குளிர் காலத்தில் எவ்வித ரஸாயியும் மெத்தையும் இல்லாமல் இரவைக் கழித்தார்கள். உணவிற்கான ஏற்பாட்டிற்காக ஹஸ்ரத் அம்மாஜான் அவர்களின் நகைகளையும் பணத்திற்கான ஏற்பாட்டிற்காக பயன்படுத்தினார்கள். மேலும் இதே தியாக உணர்வை அன்னாரின் தோழர்களும் நமக்குக் காட்டினார்கள். அவர்கள் தமது வசதிகளை விட மற்றவர்களின் வசதிக்கு முன்னுரிமை வழங்கினர். எனவே **இதில் நமது பணியாளர்களுக்கு படிப்பினை இருக்கிறது. சில நேரத்தில் சில நிலைமைகளில் எங்கேயாவது உணவில் குறைவு ஏற்பட்டால் கவலையடையக் கூடாது. மாறாக, விருந்தினர்களுக்காக தியாகம் செய்ய வேண்டும்.**

**ஹஸ்ரத் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:**

''ஜங்கே முகத்தஸ் விழாவின்போது பல விருந்தினர்கள் வருகை தந்திருந்தனர். ஒரு நாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களுக்காக உணவு கொண்டு வந்து வைப்பது மறந்து விட்டது. நான் என் மனைவியிடம் வலியுறுத்திக் கூறியிருந்தேன். ஆனால் அவர் அதிகமான வேலைகளில் ஈடுபட்டிருந்ததால் மறந்து விட்டார். இரவின் பெரும் பகுதி கழிந்து விட்டது. ஹஸ்ரத் (அலை) அவர்கள் நீண்ட நேரம் காத்திருந்த பிறகு, உணவைப் பற்றிக் கேட்டர்கள். அப்போது அனைவருக்கும் கவலை ஏற்பட்டது. கடைகளும் மூடியிருந்தன. உணவு கிடைக்க முடியவில்லை. நிலைமையைப் பற்றி ஹுஸூர் (அலை) அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அப்போது அவர்கள் **இந்த அளவுக்கு பதற்றமடைய வேண்டிய,துன்பப்பட வேண்டிய தேவை என்ன? மக்கள் சாப்பிட்ட உணவு விரிப்பில் சென்று பாருங்கள். அங்குஏதாவது எஞ்சியது இருக்கும். அதுவே போதுமானது எனக் கூறினார்கள்.** உணவு விரிப்பில் சென்று பார்த்தபோது அங்கு ரொட்டிகளின் சில துண்டுகள் இருந்தன. இதுவே போதுமானது என அன்னார் கூறினார்கள். மேலும் அதிலிருந்து ஒன்றிரண்டு துண்டுகளை எடுத்து சாப்பிட்டார்கள்.''

இந்த சம்பவத்தைக் குறிப்பிடும் **யஃகூப் அலி இர்ஃபானி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''வெளிப்படையில் பார்க்கும்போது இது ஒரு சாதாரண சம்பவமாகத் தெரியும். ஆனால் இதிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எளிமை, பகட்டின்மை ஆகியவற்றின் வியக்கத்தக்க நல்லொழுக்க அற்புதம் வெளிப்படுகிறது. உணவைப் பொருத்தவரை அவர்களுக்காக புதிதாக ஆயத்தம் செய்திருக்க முடியும். அதனால் அனைவருக்கும் மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் பொருத்தமற்ற நேரத்தில் துன்பம் கொடுப்பதை விரும்பவில்லை; மேலும் தமக்காக நன்கு ஆயத்தம் செய்யப்பட்ட உணவு வரவில்லை என்பதை பொருட்படுத்தவுமில்லை. மேலும் இந்த கவனக்குறைவிற்காக எவரையும் கேள்வியும் கேட்கவில்லை; கோபப்படவுமில்லை. மாறாக, மிகவும் மகிழ்ச்சியுடன், முகமலர்ச்சியுடன் மற்றவர்களின் பதற்றத்தை நீக்கினார்கள்.''

**எனவே உணவில் குறைவு ஏற்படும் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவானாலும்பொறுத்துக் கொள்ள வேண்டும்.** நமது பணியாளர்களில் பெரும்பாலானவர்கள் அல்லாஹ்வின் அருளால் நல்ல முன்மாதிரியைக் காட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள். உணவில் குறைவு ஏற்பட்டாலும் அதனைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் சில நேரத்தில் முறையீடு செய்பவர்களும் சிலர் இருக்கிறார்கள். எனவே அவர்களும் இந்த விஷயத்தை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். **ஆனால் ஒவ்வொரு துறையின் மேலதிகாரிகளும் அல்லது உணவுத் துறையினரும் அல்லது விருந்தோம்பல் செய்பவர்களின் பணி என்னவென்றால், அவர்கள் முன்னரே டியூட்டி கொடுப்பவர்களுக்காக உணவிற்கான ஏற்பாட்டை செய்து வைக்க வேண்டும். அவர்கள் டியூட்டியை முடித்து விட்டு வரும்போது அவர்களுக்கு உணவை கொடுக்க வேண்டும்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய ஓர் அடிப்படையான வழிகாட்டலை நான் உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறேன். அதனை பணியாளர்கள் எப்போதும் முன்னிறுத்த வேண்டும். விருந்தினர்களுக்கான ஏற்பாடுகள், விருந்தோம்பல் பற்றி பேச்சு வந்தபோது கூறினார்கள்:

'' எந்தவொரு விருந்தினருக்கும் துன்பம் ஏற்படக் கூடாது என்பதில் எனக்கு எப்போதும் கவனம் இருக்கிறது. முடிந்த வரை விருந்தினருக்கு வசதிகளைக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். விருந்தினரின் உள்ளம் கண்ணாடியைப் போன்று மிகவும் மென்மையானதாக இருக்கிறது. கொஞ்சம் அடிபட்டாலும் அது உடைந்து விடுகிறது. இதற்கு முன்னர் நானும் விருந்தினர்களுடன் அமர்ந்து உணவு சாப்பிட்டு வந்தேன். ஆனால் நோய்

அதிகமானபோது, பத்திய உணவு சாப்பிட வேண்டியது ஏற்பட்டபோது (விருந்தினருடன் அமர்ந்து உண்ணும்) அதனை பேண முடியவில்லை. அத்துடன் இடம் போதுமானதாக இல்லாத அளவுக்கு விருந்தினர்களின் வருகையும் அதிகமாகி விட்டது. எனவே தனியாக சாப்பிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் தனது கஷ்டத்தை நம்மிடம் எடுத்துரைக்க நம் சார்பாக அனுமதி இருக்கிறது. சிலர் நோயாளிகளாக இருக்கின்றார்கள். அவர்களுக்காக தனி உணவிற்கான ஏற்பாடு செய்யலாம்.’’

எனவே ஒருபோதும் எந்தவொரு விருந்தினரின் உணர்வையும் புண்படுத்தக் கூடாது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். எல்லா இடத்திலும், எல்லா சந்தர்ப்பத்திலும் உயர்ந்த ஒழுக்கத்தை காட்ட வேண்டும். எவராவது துன்பத்தை வெளிப்படுத்தினாலும் அவருக்கு அவமரியாதையாக பதிலளிப்பதற்குப் பகரமாக அவரது துன்பத்தை நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். கடைசியில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். அல்லாஹ்வின் அருளால் தற்போது பல்வேறு துறைகளில் பணியாளர்களிடம் கணிசமான அளவுக்கு தர்பிய்யத் ஏற்பட்டு விட்டது; அவர்கள் தமது பணிகளை நன்கு புரிந்துள்ளனர். அதனை செய்ய வேண்டும் என்பதில் உறுதியாகவும் இருக்கிறார்கள். ஆனால் சில நேரத்தில் தேவைக்கு அதிகமாக நம்பிக்கை வைப்பது, ஏற்பாட்டில் பலவீனங்களை உருவாக்கி விடுகின்றன; நம்பிக்கை வையுங்கள். ஆனால் அதன் காரணமாக நுணுக்கமான முறையில் சென்று அதன் எல்லா அம்சங்களின் பக்கமும் கவனமூட்டுவதில் சோம்பேறித்தனம் காட்டாதீர்கள்.

பிறகு இன்னொரு விஷயம். அதாவது பாதுகாப்புத் துறை குறிப்பாக அதிகம் சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஜமாஅத் உலகத்தில் அறிமுகமாகிக் கொண்டிருப்பதாலும், முன்னேற்றம் கண்டு கொண்டிருப்பதாலும் பொறாமைக் காரர்கள், எதிரிகளின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஜமாஅத்திற்கு எதிராக சதித்திட்டம் தீட்டுவதில் அவர்களின் முயற்சிகளும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த (பாதுகாப்புத்) துறை இப்போதிருந்தே சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். **செக்யூரிடி இந்த எல்லா ஆழமான பார்வையுடன் செயல்படும் அதே சமயத்தில் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதிலும் எந்தக் குறைவும் ஏற்படக் கூடாது என்பதையும் நினைவிற் கொள்ளுங்கள். எல்லா Checking Point – லும் டியூட்டி கொடுப்பவர்கள் நல்ல பண்பாட்டை வெளிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும்.** மேலும் எல்லா இடத்திலும் சிறுவர்கள் மட்டும் இருந்தால் போதாது. மாறாக, புரியும் திறன் கொண்ட பெரியவர்களும் எல்லா இடத்திலும் இருக்க வேண்டும். எல்லாவறையும் விட மேலாக பணிசெய்கின்ற இந்த அனைவரும் தமது பணி சிறந்த முறையில் நிறைவேறுவதற்கு துஆ செய்ய வேண்டும். நமது எல்லா வேலைகளும் எவருடைய திறமை அல்லது முயற்சியினால் அல்ல; மாறாக, அல்லாஹ்வின் அருளினால் நடக்கின்றன. அல்லாஹ்வின் அருளையும் உதவியையும் பெறுவதற்கு துஆ மிகவும் முக்கியமானதாகும். அதை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. அவ்வாறே பணியாளர்கள் மட்டுமின்றி நாம் அனைவரும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளையும் தனது அருளால் குறித்த நேரத்தில் முழுமை செய்வானாக. விருந்தினர்களுக்கு எல்லா வகையிலும் வசதிகள் கிடைக்கட்டுமாக.

**Summarized By: Majlis Ansarullah Bharath**

**Translated By: *O.M.Muzzammil Ahmad* For TAMIL Desk**

**Published By Nazarat Nashr-O-Isha’ath Qadian, 143 516, Punjab**